திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள இந்தக் குடிநீர் வாரியம் மக்களுக்குக் குடிநீரோடு பாம்பு, விலாங்கு இவற்றையும் சேர்த்துக் கொடுக்கக்கூடாது என்று உறுதியாக இந்த அரசாங்கம் தெரிவிக்குமா ?

(விடை இல்லை.)

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த வாரியத்தின் உறுப்பினர்களாக மறுபடியும் அதிகாரிகளே முழுமையாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லா போர்டுகளிலும் அவர்களே இருப்பதினால், அவர்களுடைய முழு கவனத்தையும் செலுத்தி, முழு நேரத்தையும் செலவிட்டு, வேலை செய்ய இயலாமல் இருப்பதினால், அதிகாரப் பற்றற்றவர்களையும் இத்தகைய வாரியத்தில் சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1972-ம் ஆண்டுக்குள் நாம் எல்லா இடங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீரை வழங்க வேண்டும் என்ற திட்டத்தை விரிவாக செயல்படுத்துவதற்கு, பல்வேறு துறைகளும் தனித்தனியாக இயங்குவதை ஒன்றாக இணைத்துச் செயல்படவேண்டும் என்ற முறையிலே இந்த வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதிலே அதிகாரப் பற்றற்றவர்களை நியமிக்கவேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

வடஆர்க்காடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

***166 வினா—திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 1967 மார்ச் முதல் 1968 பிப்ரவரி முடிய சென்னை உயர்நீதி மன்றத்திற்கு வழக்குக்காகச் செலவிட்ட தொகை எவ்வளவு?

(இ) இந்த வழக்குகள் சம்பந்தமாக செலவு செய்ய மேற்படி வங்கியின் சிப்பந்திகளின் சம்பளத்திலிருந்து 4 சதவிகிதம் வசூலிக்கப்பட்டது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஒன்றுமில்லை.

(இ) இல்லை.

பாண்டியாறு—புன்னம்புழா திட்டம்

***167 வினா—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு—புன்னம்புழா நதியில் கட்டப்படும் அணையின் மூலம் பாசனம் பெறும் பகுதிகள் யாவை ?

(இ) இப்பாசன வசதிகளுக்கெனச் செலவழிக்கத் திட்டமிடப்பட்டுள்ள தொகை என்ன ?